DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 111/2012 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| | |
| Name | மாயக்கண்ணன் |
| Father / Husband Name | முத்தையா |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 17th August 2022.

-----------------------------------------------------------------------------------------------------------------------

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை :-

1) மீனாள் காம்பவுண்ட்டு முத்துப்பாண்டி என்பவருக்கு சொந்தம் என்று சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 177/2011 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் முத்தையா என்பவர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. எனது அப்பா தாக்கல் செய்துள்ள வழக்கின் சாராம்சம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் முத்துலெட்சுமி மற்றும் முத்துப்பாண்டி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது அப்பா தாக்கல் செய்துள்ள வழக்கு என்ன நிலையில் உள்ளது என்றால் கீழ் நிலை நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எனது வீடு எங்கு உள்ளது என்றால் சம்பவ சொத்திற்கு அருகாமையில் 100 அடி தொலைவில் உள்ளது. எனது வீட்டை சுற்றி எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 100 வீடுகள் உள்ளது. நான் சத்தம் கேட்டதற்கு பின்பு தான் வீட்டிலிருந்து வெளியே வந்தேனா என்றால் ஆமாம். அந்த மீனாள் காம்பவுண்ட்டில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 3 வீடுகள்

உள்ளது. 3 வீடுகளிலும் வெவ்வேறான ஆட்கள் குடியிருக்கிறார்கள். சந்திரன், லெட்சுமி, முத்துப்பாண்டி, ரமேஷ் ஆகியோர்கள் இடையமேலூரில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். காஞ்சிரங்காலுக்கும், இடையமேலூருக்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 9 கிலோ மீட்டர்.

3) மீனாள் உயிருடன் இருக்கும் போதே பதிவு செய்யப்பட்ட ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளரா என்றால் ஆமாம் முத்தையா மற்றும் முத்துப்பாண்டி பெயரில் ஏற்படுத்தியுள்ளார். காஞ்சிரங்காலுக்கும், நகர காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கிலோ மீட்டர். சம்பவம் நடந்ததாக சொல்லும் காலக்கட்டத்தில் ரமேஷ் இஞ்சினியர் முடித்து தஞ்சாவூரில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். வீட்டுவாரிய துறையில் நான் பணிபுரிந்தேனா என்றால் 2001 ல் வி.ஆர்.எஸ் பெற்றுவிட்டேன். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளது போல் எனது அப்பாவிற்கு இந்த வழக்கின் எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

4) நானும், எனது அப்பா, அம்மா சேர்ந்து தான் அந்த இடத்தை அபகரித்துக்கொண்டு எதிரிகளிடம் பிரச்சனை செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நாங்களே தனிச்சையாக காயத்தை ஏற்படுத்தி கொண்டு எதிரிகள் மீது இந்த பொய் புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. புகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் அந்த இடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

5) நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டி எதிரிகளை அச்சுறுத்தும் விதமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல எனது அப்பாவை எதிரிகள் கொலை செய்த வழக்கு நிலுவையில் உள்ளது. எதிரிகள் மீது உள்ள முன்விரோதத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 17.08.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.